ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
අංක 1652/4 - 2010 මැයි 03 වැනි සඳුදා - 2010.05.03
*1652/4 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

கோரளைப் பற்று வடக்கு பிரதேச சபை

*கோரளைப் பற்று வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. செல்வம் பாஸ்கரன் என்பவர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி அச்சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென கோரளைப் பற்று வடக்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

*தேர்தல்கள் அலுவலகம்,*
*மட்டக்களப்பு.*
*2010, ஏப்பிரல் 23.*

*5 - 365*

---

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

கோரளைப் பற்று மேற்கு பிரதேச சபை

*கோரளைப் பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரான மொகமட் கனி மொகமட் மொகிடீன் என்பவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி அச்சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென கோரளைப் பற்று மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை.

*தேர்தல்கள் அலுவலகம்,*
*மட்டக்களப்பு.*
*2010, ஏப்பிரல் 23.*

*5 - 366*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், அலவ்வ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*அலவ்வ பிரதேச சபை உறுப்பினரொருவரின் பதவி, கட்சியின் உறுப்புரிமை இல்லாதொழிந்ததன் காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*கே. ஏ. சுமதிபால எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய, அக்கட்சியைச் சேர்ந்தவரும் அலவ்வ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆளொருவரை பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஆர். ஏ. டி. எச். ரணசிங்க என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது அலவ்வ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், ஆர். எம். ஏ. எல். ரத்னாயக ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஆர். ஏ. டி. எச். ரணசிங்க என்பவர், அலவ்வ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஆர். எம். ஏ. எல். ரத்னாயக,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*குருநாகல்.*
*2010, ஏப்ரல் 22.*

*5 - 367/1*

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், அலவ்வ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*அலவ்வ பிரதேச சபை உறுப்பினரொருவரின் பதவி, கட்சியின் உறுப்புரிமை இல்லாதொழிந்ததன் காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*எச். எம். தர்மரத்ன எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய, அக்கட்சியைச் சேர்ந்தவரும் அலவ்வ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆளொருவரை பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*மேலே கூறப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அலகியவன்ன மொஹொட்டாலலாகே தொன் சமந்த உபுல் பண்டார அலகியவன்ன என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

இப்போது அலவ்வ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், ஆர். எம். ஏ. எல். ரத்னாயக ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அலகியவன்ன மொஹொட்டாலலாகே தொன் சமந்த உபுல் பண்டார அலகியவன்ன என்பவர், அலவ்வ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஆர். எம். ஏ. எல். ரத்னாயக,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அலவ்வ பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்.
2010, ஏப்ரல் 22.

5 - 367/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.